



dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI


www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 313 | 4 Pages | 8.6.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 313 | 4 பக்கங்கள் | 8.6.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்**
**உய்யா விழுமந் தரும்**

**விளக்கம்:** தான் ஒன்றும் செய்யாதிருக்கத் தனக்குத் தீங்கு செய்தவர்க்கும் துன்பமானாவற்றைச் செய்தால் செய்தபிறகு தப்பமுடியாத துன்பத்தையே கொடுக்கும்.

## விவசாயிகளுக்கு சேவை செய்வது பாக்கியம் பிரதமர் மோடி



புதுடெல்லி , ஜூன் 8

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ,

கடின உழைப்பாளிகளான விவசாயிகளுக்கு சேவை செய்வது எங்களுக்குக் கிடைத்த பாக்கியம். கடந்த 11 ஆண்டுகளாக, விவசாயிகளுக்கு அரசு பல வளர்ச்சி திட்டங்களைகொண்டுவந்துள்ளது. செழிப்பை அதிகரித்துள்ளன. மேலும் விவசாயத் துறையின் ஒட்டுமொத்த மாற்றத்தையும் உறுதி செய்துள்ளன. மண் ஆரோக்கியம் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற விஷயங்களில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம், அவை பெரிதும் பயனளித்துள்ளன. விவசாயிகள் நலனுக்கான எங்கள் முயற்சிகள் வரும் காலங்களில் அதிக செயலுடன் தொடரும்.என தெரிவித்துள்ளார் .

## மதுரை, தூத்துக்குடி இடையே சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூலிக்க தடை சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு




புதுடெல்லி, ஜூன் 8

மதுரைதூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் சாலையோரம் இருபுறங்களிலும், சாலையின் நடுப்பகுதியிலும் மரக்கன்றுகள், செடிகள் நட்டு பராமரிக்கவில்லை, இரவு நேரங்களில் விபத்துகளை தவிர்க்கும் வகையில் வண்ண விளக்குகள் வைக்கவில்லை என்பன உள்ளிட்ட காரணங்களால்மதுரை,தூத்துக்குடி இடையிலான2சுங்கச்சாவடிகளில் கட்டணம்வசூலிக்கதடைவிதிக்கவேண்டும்எனக்கூறிதூத்துக்குடியை சேர்ந்த பாண்டியன் என்பவர் மதுரை ஐகோர்ட்டு கிளையில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, சாலையை முறையாக பராமரிக்கவில்லை எனக்கூறி எலியார்பத்தி மற்றும் புதூர் பாண்டியாபுரம் சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூலிக்க இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார். சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் வரை சுங்க கட்டணம் வசூலிக்க கூடாது என்றும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டார்.

இந்நிலையில், மதுரை ஐகோர்ட்டு கிளையின் உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மேல்முறையீடு செய்துள்ளது. இந்த மனு, வருகிற 9ந்தேதி சுப்ரீம் கோர்ட்டு விடுமுறை கால சிறப்பு அமர்வில் விசாரணைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.

## பா.ஜ.க. ஆட்சியின் முதலாமாண்டு விழா: ஒடிசா செல்லும் பிரதமர் மோடி



பாட்னா, ஜூன் 8

ஒடிசாவில் கடந்த ஆண்டு தேர்தல் நடைபெற்றது. இதில், பா.ஜ.க. கூட்டணி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. மாநில முதல் மந்திரியாக பா.ஜ.க.வை சேர்ந்த மோகன் சரண் மாஜி செயல்பட்டு வருகிறார். ஒடிசாவில் நவின் பட்நாயக் தலைமையிலான 24 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வந்து அம்மாநிலத்தில் முதல் முறையாக பா.ஜ.க. ஆட்சியமைத்தது. கடந்த ஆண்டு ஜூன் 12ம் தேதி பா.ஜ.க. அரசு பதவியேற்றது.

இந்நிலையில், ஒடிசாவில் பா.ஜ.க. ஆட்சியின் முதலாமாண்டு விழாவை விமர்சையாக கொண்டாட பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது. இதற்காக வரும் 20ம் தேதி பிரமாண்ட நிகழ்ச்சிக்கு பா.ஜ.க. ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். பிரதமர் மோடி, உள்துறை மந்திரி அமித்ஷா, பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா உள்பட பல தலைவர்கள் 20ம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளநிகழ்ச்சியியில்பங்கேற்கின்றனர். இதற்காகபிரதமர் மோடி 19ம் தேதி ஒடிசா செல்ல உள்ளார்.

# 'உள்ளம் உவகையில் நிறைகிறது' CLAT தேர்வில் சாதித்த மலைவாழ் மாணவரை வாழ்த்திய முதல்வர் ஸ்டாலின்!

சென்னை

பொது சட்ட நுழைவுத் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பிடித்து தேசிய சட்ட பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி பயில தகுதி பெற்றுள்ள முதல் பழங்குடியின மாணவர் பரத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். மாணவர் பரத் சட்டம் பயின்று அந்த அறிவொளியை இந்த சமூகத்திற்கு அளிக்க வேண்டும் என்றும், அதற்கு திமுக துணை நின்று வழிநடத்தும் என்று பதிவிட்டுள்ளார்.

திருச்சி மாவட்டம் பச்சமலை தோனூர் மலைக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர் பரத். இவர் CLAT எனும் பொது சட்ட நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். அதுமட்டுமல்லாமல் பச்சமலைப் பகுதியில் CLAT தேர்வில் தேர்ச்சி பெற்று தமிழ்நாடு தேசிய சட்ட பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயில தகுதி பெறும் முதல் பழங்குடியின மாணவர் என்ற புதிய சாதனையையும் செய்திருக்கிறார்.



*CM Stalin congratulates first tribal student from Tamil Nadu to top the state in CLAT and qualify for higher studies at a National Law University*

இதுகுறித்து மாணவரின் தந்தை செல்வக்குமார் பேசுகையில், அம்மா இல்லை.. 10 ஆண்டுகளுக்கு முன்பே அம்மா இறந்துவிட்டார். நமது மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்றால் சட்டம் மட்டுமே முன்னாடி இருக்கிறது. அதனை படித்தால் மக்களுக்கு உதவியாக இருப்பான் என்று உழைத்து படித்த வைத்தேன். இவர் படிப்பு மக்களுக்கு பயன்படும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து மாணவர் பரத் பேசுகையில், பச்சமலையில் யாருமே வக்கீலுக்கு படித்தவில்லை. நான்தான் முதல்முறையாக சட்டம் படிக்க போகிறேன் என்று தெரிவித்துள்ளார். மாணவரின் இந்த பேட்டி வெளியாகி சோசியல் மீடியாவில் ட்ரெண்டான நிலையில், முதல்வர் ஸ்டாலினின் கவனத்திற்கு சென்றுள்ளது. இத னை பகிர்ந்து ஸ்டாலின் மாணவர் பரத்திற்கு வாழ்த்து கூறியுள்ளார்.

அதில், உள்ளம் உவகையில் நிறைகிறது.. தம்பி பரத் சட்டம் பயின்று தன் அறிவொளியை இந்தச் சமூகத்துக்கு வழங்கிட வேண்டும் என வாழ்த்துகிறேன். அவரது சட்டப் படிப்புக்குத் திமுக சட்டத் துறையும், அதன் செயலாளர் என். ஆர்.இளங்கோவும் துணை நின்று அவரை வழிநடத்துவார்கள் என்று பதிவிட்டுள்ளார்.

சில நாட்களுக்கு முன்பாக சேலம் கல்வராயன் மலைப்பகுதியைச் சேர்ந்த பழங்குடியின மாணவி ராஜேஸ்வரி JEE Advanced 2025 தேர்தலில் வெற்றி பெற்று ஐஐடியில் உயர்கல்வி பயில தகுதி பெற்றார். அவரது தந்தை கடந்த ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நிலையில், தந்தையின் கனவை நனவாக்கி ராஜேஸ்வரி சாதித்தார். அதற்கு முதல்வர் ஸ்டாலின், ராஜேஸ்வரியின் கல்வி செலவு முழுவதையும் அரசு ஏற்கும் என்று அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

## சீர்காழியில் உலக சுற்றுச்சூழல் தினம்



சீர்காழி ஜூன் 7

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகரில் 129 ஆண்டுகளை கடந்து கல்விப்பணியாற்றி வரும் சபாநாயக முதலியார் இந்து மேல் நிலைப்பள்ளியில் உலக சுற்றுச்சூழல் தினம் பள்ளியில் செயல்பட்டு வரும் தேசிய பசுமை படை, மற்றும் சுற்றுச்சூழல் மன்றம் ஆகிய அமைப்புகளின் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினமானது வெகு சிறப்பாக மாணவர்களிடையே கொண்டாடப்பட்டது . இந்நிகழ்வில் இயற்கை பசுமை குறித்த உறுதிமொழி மாணவ, மாணவிகள் எடுத்துக்கொண்டனர் , பசுமை பற்றிய ஓவிய போட்டிகள், மரக்கன்று நடும் நிகழ்வு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் டி.சீனிவாசன் தலைமையில், பள்ளி தேசிய பசுமை படை பொறுப்பாசிரியர் கே. வாசுதேவன் மற்றும் பள்ளி சுற்றுச்சூழல் மன்ற பொறுப்பாசிரியர் எஸ். ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் பள்ளியின் புதிய தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றுள்ள எஸ். முரளீதரன், மரக்கன்றுகளை நட்டார். இந்நிகழ்வில் மூத்த முதுகலை ஆசிரியர் வி. முருகபாண்டியன், பட்டதாரி ஆசிரியர் பி. விஜயஐயப்பன் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## காலி நிலம் வைத்திருப்பவர்களுக்கு சென்னை மாநகராட்சி எச்சரிக்கை

சென்னை , ஜூன் 8

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் காலி நிலங்கள் வைத்துள்ள நில உரிமையாளர்களுக்கான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

காலி மனையில் செடிகள், மண்டுதல், குப்பைகள், மழைநீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.காலி நிலத்தில் எல்லையை சுற்றி வலுவான மற்றும் பாதுகாப்பான வேலியை அமைக்க வேண்டும். நிலத்தில் திடக்கழிவு அல்லது கட்டிடக் கழிவுகள் தேங்கியிருப்பதை தவிர்க்க வேண்டும்.



பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்க காரணமாக இருக்கும் கழிவுகளை எரிப்பதை தவிர்க்க வேண்டும். நிலத்தில் அதிகமாக வளர்ந்துள்ள செடிகளை அகற்றி குப்பைகள் தேங்காமால் பார்த்து கொள்ள வேண்டும் போன்ற வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. காலிமனை வைத்துள்ள உரிமையாளர்கள் வழிகாட்டுதல்களை பின்பற்றாவிட்டால் ரூ.25000 அபராதம் விதிக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

## தி.மு.க. அரசின் மெத்தனப் போக்கால் 500 மாணவர்களின் மருத்துவ கனவு சிதைந்துவிட்டது ஓ. பன்னீர்செல்வம்

சென்னை ஜூன் 8

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தைப் பெற்றால்தான் எச்செல்வத்தையும் எளிதில் பெற முடியும் என்பதன் அடிப்படையில், நோய்களை நீக்குவதற்கான மருத்துவ வசதிகளை மக்களுக்கு அளிக்க வேண்டும். அதாவது, மருத்துவமனைகளை உருவாக்குவது, மருத்துவர்களை அதிக அளவில் உருவாக்குவது. அரசு மருத்துவமனைகளில் ஆசிரியர்களை உடனுக்குடன் நியமிப்பது, போதிய மருந்துகளை இருப்பில் வைப்பது போன்ற வசதிகளை மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் பெற வழிவகை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ஒட்டுமொத்த மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் மேம்படும். ஆனால், இதற்கு முற்றிலும் முரணான நிலைமை தமிழ்நாட்டில் நிலவுகிறது.

தமிழ்நாட்டில் 36 அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் உள்ளன. இந்த மருத்துவ கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மருத்துவம் கற்றுத்தர போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். மேலும், மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் சிறப்பாக செயல்பட ஏதுவாக மருத்துவக் கட்டமைப்பை ஏற்படுத்தித்தர வேண்டும். ஆனால், இவற்றை தி.மு.க. அரசு சரியாக செய்து தருவதில்லை. ஒவ்வொரு ஆண்டும், தேசிய மருத்துவ ஆணையம் அரசுக் கல்லூரிகளை ஆய்வு செய்து குறைபாடுகளை சுட்டிக்காட்டி மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரத்தை ஏன் ரத்து செய்யக்கூடாது என்று வினவுவதும், அதற்கு மழுப்பலாக அரசு தரப்பில் பதில் அளிப்பதும் வாடிக்கையாக நடைபெற்று வருகிறது. அரசு சார்பில் அளிக்கப்படும் உறுதிமொழியின் அடிப்படையில் மருத்துவ கல்லூரிகளுக்கான அங்கீகாரம் ரத்து செய்யப்படவில்லை என்றாலும் கூடுதல் மருத்துவ பணியிடங்களுக்கு ஒப்புதல் தர தேசிய மருத்துவ ஆணையம் மறுத்து வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், புதிதாக துவங்கப்பட்ட பத்து மருத்துவ கல்லூரிகளில் கூடுதலாக தலா 50 எம்.பி.பி.எஸ். இடங்களை ஏற்படுத்தித் தரும்படி தமிழ்நாடு அரசின் சார்பில் தேசிய மருத்துவ ஆணையத்திடம் வலியுறுத்தப்பட்டும், ஆசிரியர்கள் பற்றாக்குறை, மருத்துவ கட்டமைப்பின்மை போன்றவற்றைச் சுட்டிக்காட்டி கூடுதலாக 500 மருத்துவ இடங்களுக்கு அனுமதி தர தேசிய மருத்துவ ஆணையம் மறுத்துள்ளது. கூடுதலாக 500 எம்.பி.பி.எஸ். இடங்களுக்கு அனுமதி தர மறுத்ததற்குக் காரணம் தி.மு.க. அரசின் அலட்சியப் போக்கே ஆகும். உடனுக்குடன் ஆசிரியர் பணியிடங்களை நிரப்பி, கட்டமைப்புகளை அவ்வப்போது மேம்படுத்தி இருந்தால், தமிழ்நாட்டிற்கு கூடுதலாக 500 மருத்துவ இடங்கள் கிடைத்திருக்கும். இதன் மூலம், கூடுதலாக 500 மாணவ, மாணவியர் மருத்துவர்களாக ஆகி இருப்பர். தி.மு.க. அரசின் மெத்தனப் போக்கு காரணமாக 500 மாணவ மாணவியரின் மருத்துவக் கனவு சிதைந்துவிட்டது. இது கடும் கண்டனத்திற்குரியது. வருகின்ற ஆண்டிலாவது, கூடுதல் மருத்துவ இடங்களைப் பெறும் வகையில், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.



இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.




# தூத்துக்குடியில் சைக்கிள் மீது கார் மோதி முதியவர் பலி




தூத்துக்குடி ஜூன் 8

தூத்துக்குடி மாவட்டம், மெஞ்ஞானபுரம் அருகில் உள்ள சொக்கன்விளை, சாஸ்தா கோவில் தெருவைச் சேர்ந்த பொன்னுசாமி மகன் சுயம்பு (வயது 70). இவருக்கு விஜயலட்சுமி என்ற மனைவியும் 3 மகன்களும் உள்ளனர். நேற்று முன்தினம் மாலை சுயம்பு உடன்குடியில் இருந்து சைக்கிளில் சொக்கன் விளை கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தார்.

அப்போது உடன்குடி பிரதான சாலையில் அவரது சைக்கிள் சென்றபோது எதிரே வந்த ஒரு கார் அவரது சைக்கிள் மீது மோதியது. இதில் பலத்த காயம் அடைந்த சுயம்பு சம்பவ இடத்திலேயே இறந்தார். இதுகுறித்து மெஞ்ஞானபுரம் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தனர்.

# தூத்துக்குடியில் கடலில் குதித்து மீனவர் தற்கொலை



தூத்துக்குடி ஜூன் 8

தூத்துக்குடி, தாளமுத்து நகர் ஜேசு நகரைச் சேர்ந்த குருஸ்மஸ்தான் மகன் பரிமளம் (வயது 47), மீனவர் ஆவார். இவர் ஜூன் 1ம்தேதி திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து வல்லத்தில் 7 பேருடன் கடலுக்குள் தங்கி மீன் பிடிக்க சென்றார். அவர் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது மற்றொரு மீனவருடன் தகராறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து சக மீனவர்கள் 2 பேரையும் சமாதானம் செய்து வைத்துள்ளனர்.

இந்தநிலையில், திரேஸ்புரம் கடற்கரை நோக்கி வந்து கொண்டிருந்த போது திடீரென பரிமளம் கடலுக்குள்குதித்துள்ளார். இதைப் பார்த்த சக மீனவர்கள்அவரைமீட்டுகரைக்கு கொண்டு வந்து 108 ஆம் புலன்சுக்கு தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து அங்கு வந்த டாக்டர் அவரை பரிசோதித்து பார்த்த பிறகு, அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தூத்துக்குடி மரைன் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீஸ் இன்ஸ்பெக்டர் பேச்சிமுத்து சம்பவ இடத்திற்கு சென்று இறந்த மீனவரின் உடலைக் கைப்பற்றி பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். மேலும் இது தொடர்பாக சக மீனவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடி: கஞ்சா வழக்கில் 5 வாலிபர்கள் கைது பைக் பறிமுதல்




தூத்துக்குடி ஜூன் 8

தூத்துக்குடியில் தாளமுத்துநகர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்துராஜா மற்றும் போலீசார் நேற்று ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒத்தவீடு சுனாமி காலனி பகுதியில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த 2 பேரை பிடித்து போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர்கள் பேண்ட் பாக்கெட்டில் விற்பனைக்காக கஞ்சா மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து போலீசார் மேற்கொண்ட விசாரணையில் அவர்கள் தூத்துக்குடி மேலூரைச் சேர்ந்த மந்திரமூர்த்தி மகன் மகராஜன் (வயது 21), மாதவன் காலனி இசக்கிமுத்து மகன்சந்தனராஜ்(18)எனத் தெரியவந்தது. பின்னர் அவர்கள் 2 பேரையும் போலீசார் கைது செய்து, அவர்களிடம் இருந்து 15 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இதேபோல் சிலுவைப்பட்டி, விநாயகர் கோவில் உப்பு சங்கம் அருகே கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாகதாளமுத்துநகர்சுனாமி குடியிருப்பு உத்தாண்டராமன் மகன் சரவணவேல்(19), ஜாகிர்உசேன் நகர் ரமேஷ் மகன் அஸ்வின்(19), சிலுவைபட்டி மேற்கு சுனாமி காலனி இசக்கிமுத்து மகன் சுப்பிரமணியன்(19) ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்து அவர்களிடம் இருந்து 25 கிராம் கஞ்சா மற்றும் பைக்கை பறிமுதல் செய்தனர். இது குறித்து தாளமுத்துநகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நிர்வாகத் திறனற்ற ஆட்சிக்கு கிளாம்பாக்கமே சாட்சி எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை ஜூன் 8

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பேருந்து சேவை முறையாகவும், சீராகவும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

கடந்த 3 நாட்களாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் போதிய பேருந்து வசதிகள் இல்லாததால், சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு செல்லும் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளதாக செய்திகள் வருகின்றன. கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை திட்டமிடல் இன்றி திறந்து, மக்களை கஷ்டப்படுத்தியது இந்த தி.மு.க. அரசு.

சரி, அதை முறையாக நிர்வாகம் செய்து பேருந்து வசதிகளை உறுதி செய்தார்களா என்றால், அதுவும் இல்லை! இன்று வரை "கிளாம்பாக்கம் பரிதாபங்கள்" ஓய்ந்தபாடில்லை. பக்ரீத், முகூர்த்த நாள் நிறைந்த வார இறுதியில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பது அரசுக்கு தெரியாதா? அதற்கான முறையான ஏற்பாடுகளை செய்யக் கூட இந்த ஸ்டாலின் மாடல் தி.மு.க. அரசுக்கு வக்கில்லையா?

சொந்த ஊருக்கு செல்லக் கூட மக்களை பரிதவிக்க வைக்கும் ஸ்டாலின் மாடல் அரசுக்கு எனது கடும் கண்டனம். கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பேருந்து சேவை முறையாகவும், சீராகவும் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என ஸ்டாலின் மாடல் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அரசு வேலை வாங்கி தருவதாக 12 பேரிடம் ரூ.1.66 கோடி பெற்று மோசடி இருவர் கைது



சென்னை, ஜூன் 8

சென்னை பெருநகர காவல், மத்தியகுற்றப்பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த புகார்தாரர் பாரதி ஆ/வ 27 மற்றும் 12 நபர்களுக்கு அரசு மக்கள் தொடர்பு அலுவலர் (APRO) மற்றும் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளர் வேலை வாங்கித் தருவதாக ராதாகிருஷ்ணன் மற்றும் மோகன்ராஜன் ஆகியோர் அறிமுகம் செய்து கொண்டு தலைமைச் செயலகத்தில் துணைச் செயலாளர் ஆக இருப்பதாகவும் பல நபர்களுக்கு அரசு துறையில் வேலை வாங்கி கொடுத்திருப்பதாக கூறியதை நம்பி பாதிக்கப்பட்ட 12 நபர்களிடம் மொத்தம் ரூ.1,66,36,000 பணத்தை பெற்றுக்கொண்டு போலியான பணிநியமான ஆணைகளை கொடுத்து ஏமாற்றியதாக 17.05.2025 அன்று கொடுத்த புகாரின் பேரில் மத்தியகுற்றப்பிரிவு வேலைவாய்ப்பு மோசடி தடுப்பு பிரவில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

புலன் விசாரணையில் எதிரிகள் 1.மோகன்ராஜன், வ/52, தி.நகர், சென்னை மற்றும் 2.ராதாகிருஷ்ணன், வ/42, விருதுநகர் மாவட்டம் ஆகிய இருவரும் புகார்தாரர் உட்பட 12 நபர்களிடம் அரசு மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளர் வேலை வேலை வாங்கி தருவதாக கூறி ரூ.1,66,36,000 பணத்தை ரொக்கமாகவும், பணபரிவர்த்தனை வங்கி மூலமாகவும் பெற்றுக் கொண்டு போலியான பணிநியமன ஆணையை வழங்கியது விசாரணையில் உண்மையென தெரியவந்தது.

மேற்கண்ட வழக்கின் விசாரணையில் உடனடி நடவடிக்கை எடுத்திட சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப அவர்களின் உத்தரவின் பேரில் மத்திய குற்றபிரிவு கூடுதல் ஆணையாளர் ராதிகா,

கா.ப அவர்களின் வழிகாட்டுதலின் பேரில், வேலை வாய்ப்பு மோசடி புலனாய்வு பிரிவு உதவி ஆணையாளர் மற்றும் காவல் ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் எதிரிகள் மோகன்ராஜன் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகிய இருவரையும் முறையே தி.நகர் மற்றும் சேப்பாக்கம் பகுதிகளில் 06.06.2025 ம் தேதி கைது செய்தனர். எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்படி சென்னை புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இது போன்று பணத்தை பெற்றுக்கொண்டுவேலை வாங்கி தருவதாகக் கூறி ஏமாற்றும் நபர்களை நம்ப வேண்டாம் என்றும், அவர்களிடம் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு சென்னை பெருநகர காவல் துறை சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஆற்காடு நகராட்சியில் நகர மன்ற கூட்டம்



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சியில் நகர மன்ற கூட்டம் நடைபெற்றது ஆற்காடு நகர மன்ற கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு ஆற்காடு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள் பங்கேற்றனர். இந்த நகர மன்ற கூட்டத்தில் துப்புரவு பணியாளர்களுக்கு அளிக்கப்படும் கைக்கவசம் மற்றும் முக கவசம் சரியான முறையில் வழங்கப்படுகிறதா என்று துணை தலைவர் கேள்வியினை முன் வைத்தார். இந்த கூட்டத்தில் பல்வேறு திட்ட பணிகளுக்கு நிதிகள் வழங்கிய தமிழக முதல்வர் மற்றும் துணை முதல்வருக்கு நன்றியினை தெரிவித்தனர். கவுன்சிலர் செல்வம் பேசுகையில் நகராட்சிக்கு என பால் வாடி அமைக்கப்பட்டது அமைக்கப்பட்ட பால் வாடியில் சீரான முறையில் கை கழுவதற்கு வசதி செய்து தரவில்லை என்றும் குற்றம் சாட்டினார். இனி வருவது எல்லாம் மழைக்காலம் என்பதால் நகராட்சி நிர்வாகம் பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படாமல் இருப்பதற்காக கொசு மருந்து அடிக்க வேண்டும் என்று கவுன்சிலர் பி.டி.குணா கோரிக்கையை முன் வைத்தார். கவுன்சிலர் அணு அருண் பேசுகையில் பேருந்து நிலைய த்தை உடனடியாக கட்டி முடிக்க வேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்தார்.

# காஞ்சிபுரம் ஆற்காடு நாராயணசாமி முதலியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் காஞ்சிபுரம் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்கினார்



காஞ்சிபுரம் ஆற்காடு நாராயணசாமி முதலியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி வி எம் பி எழிலரசன் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்

தாலுகா ஆபீஸ் எதிரே ஆற்காடு நாராயணசாமி முதலியார் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது இங்கு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகின்றனர் ஏப்ரல் மே கோடை விடுமுறையை அடுத்து பள்ளி முதல் நாள் துவக்க விழாவை முன்னிட்டு 200க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் பள்ளி சீருடை பேனா உள்ளிட்ட மாணவர்கள் தேவையான உபகரங்களை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி பி எம் பி எழிலரசன் வழங்கினார் பின்னர் மாணவிகளுடன் எதிர்காலத்தை பற்றிய கருத்துகளையும் வாழ்க்கையில் வெற்றி பெறக்கூடிய வழிமுறைகளையும் கலந்துரையாடினார் அதை தொடர்ந்து மாணவிகள் சட்டமன்ற உறுப்பினர்சி வி எம் பி எல் அரசிடம்போட்டிபோட்டு புகைப்படம் எடுத்துக் கொண்டனர் இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் ஆறுமுகம் மண்டலகுழுதலைவர். சசிகலா. பகுதிசெயலாளர். திலகர்தலைமை ஆசிரியர் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# பொது மருத்துவ முகாமும் இலவச கண் பரிசோதனை ஐந்து லட்ச ரூபாய் காண மருத்துவ காப்பீடு திட்டத்தில் சேர்வதற்கும். பிரதம மந்திரியின் இலவச கேஸ் இணைப்பு திட்டம்



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தெற்கு ஒன்றியம் வெங்கடேஸ்வரபுத்தில் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் ஆணைகினங்க தென்காசி மாவட்டதலைவர்ஆனந்த் அய்யாசாமி அறிவுத்தலின் படி தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தெற்கு ஒன்றிய தலைவர் குமரகுருபரன் தலைமையில் வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் இன்று மருத்துவ முகாம் நடைபெற்றது

இம் முகாமில் பொது மருத்துவ முகாமும் இலவச கண் பரிசோதனை ஐந்து லட்ச ரூபாய் காண மருத்துவ காப்பீடு திட்டத்தில் சேர்வதற்கும். பிரதம மந்திரியின் இலவச கேஸ் இணைப்பு திட்டத்தின் கீழ் பயனடைவதற்கும் இன்றும் முகாம் நடைபெறுகிறது

இதனை தொடர்ந்து வெங்கடேஸ்வரபுரம் பாலமுருகன் திருக்கோயில் அண்ணாமலை அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோயிலில் சிறப்பு பூஜை மற்றும் பிரசாதம் பொது மக்கள் மற்றும் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது

இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்த டாக்டர் அருணாசலம் நிகழ்ச்சியில் ஆலங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் வெள்ளத்துரை ஒன்றிய துணைத் தலைவர் மலையப்பன் செந்தில் ஸ்ரீ பாலமுருகன் கோவில் நிர்வாகிகள் அய்யாதுரை மகாலிங்கம் மற்றும் கட்சி தொண்டர்கள் அனைவரும் கலந்து கொண்டு மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது



உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், பொய்கைப்பட்டி ஊராட்சி, நாடகமேடை சமுதாயக்கூடம் அருகில், கஸ்பா பொய்கைப்பட்டி பகுதியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றி, இம்முகாமில் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# கிளாம்பாக்கத்தில் போதிய பேருந்து சேவை இல்லை த.வெ.க. கண்டனம்

சென்னை ஜூன் 8

தமிழக வெற்றிக் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் நிர்மல் குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை மாநகரில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் சென்னைக்குள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. சென்னை மற்றும் புறநகரில் அதிகரித்து வரும் மக்கள் தொகையின் எண்ணிக்கை மற்றும் அடர்த்திக்கு ஏற்றவாறு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் கிடைக்கின்றனவா என்றால் இல்லை என்பதே பதில். இதற்கு மிகப் பெரிய உதாரணம், இந்த வாரம் ஜூன் 4ம் தேதி இரவு முதல் கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலையத்தில் வெளியூருக்குச் செல்லும் பயணிகள், பேருந்துகள் இல்லாமல் கடும் அவதிக்கு உள்ளான கொடும் சம்பவம்.

சென்னைக்கு வெளியே வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் எந்த ஓர் அடிப்படையான போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்தாமல் புதிய பேருந்து நிலையம் அவசரகதியில் திறக்கப்பட்டது. சென்னையின் பல்வேறு பகுதிகளில் இருந்து கிளாம்பாக்கம் செல்ல, ரெயில் மற்றும் பேருந்துப் போக்குவரத்தைப் போதிய அளவில் உருவாக்காமலேயே புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டதால், திறந்தது முதலே பொதுமக்கள் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர்.

கோயம்பேடு பேருந்து நிலையம் தொடங்கப்பட்ட போதும் போதிய வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் தொடங்கப்பட்ட போதும் போதிய வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. மக்களின் தேவைகள் என்ன என்பதை அறிந்து அதற்கேற்ப திட்டமிட்டுச் செயல்படுத்துவதே சிறந்த ஆட்சி. ஆனால் தமிழ்நாட்டை இதுவரை ஆட்சி செய்தவர்கள் மக்களின் தேவைகளை அறிந்து ஆட்சி செய்யவில்லை என்பதற்கு இந்த இரு பேருந்து நிலையச் செயல்பாடுகளே கண்ணெதிரே காணும் சாட்சிகள்.

இது ஒருபுறம் இருக்க, கடந்த புதன்கிழமை இரவு கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலையத்தில் போதிய பேருந்துகள் இல்லாததால், தென் மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டிய பயணிகள் தங்களது குடும்பத்தினருடன் கைக்குழந்தைகளோடு கடும் அவதிக்கு உள்ளாகியது மிகுந்த மன வேதனையைத் தருகிறது. பல மணி நேரம் காத்திருந்து, இங்கும் அங்குமாய் அலைந்து திரிந்த பயணிகள் பேருந்துச் சேவையே இல்லை என்பது தெரிந்ததும், கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகினர். அந்த நள்ளிரவில் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் தங்களது குடும்பத்தினருடன் அரசுக்கு எதிராக முழக்கமிட்டு, சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் பல மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த காவல் துறையினர் பேச்சுவார்த்தை நடத்தியுமே பொதுமக்கள் சமாதானம் ஆகவில்லை. இதன் மூலம்அவர்களின்கோபம் எந்த அளவு இருந்திருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது. கோவில் திருவிழா காரணமாகப் பேருந்துகள் அனுமதிக்கப்படவில்லை. அதனால்தான் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் இயக்கப்படவில்லை என்று அரசு கூறும் காரணம், பொதுமக்கள் மீது பழியைச் சுமத்தி, தங்களின் நிர்வாகத் தோல்வியை மறைக்கப் பார்ப்பதேயன்றி வேறில்லை.


கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் என்றாலே மக்களின் கிளர்ச்சிப்பாக்கம் என்று விமர்சிக்கும் வகையில், பயணிகள் பேருந்துகள் வசதியின்றி கடும் அவதிக்கு உள்ளாவதே இன்னும் தொடர்கதையாகி வருகிறது. பேருந்துகளை மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப எவ்வாறு இயக்குவது என்பது தொடர்பான அடிப்படை விஷயம் கூட ஆட்சியாளர்களுக்குத் தெரியாதா? ஆட்சியாளர்கள் மக்களைப் பற்றிச் சிறிதேனும் அக்கறை கொண்டிருந்தால் இவ்வாறு நடந்து கொள்வார்களா?

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் திறக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் ஆகியும் முறையான பேருந்து சேவைகள் செய்யப்படாதது கடும் கண்டனத்துக்கு உரியது. திருவிழாக் காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் கிளாம்பாக்கத்தில் இருந்து தென் மாவட்டங்கள் மற்றும் இதர மாவட்டங்களுக்கு அதிகப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகத் தலைவரின் ஒப்புதலுடன் தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# அதிமுக ஐடி விங் நிர்வாகியின் 'தில்லாலங்கடி'.. பிரசாத்தை கட்சியில் இருந்து நீக்கிய எடப்பாடி!

சென்னை

அதிமுக ஐடி விங் நிர்வாகி பிரசாத்தை கட்சியிலிருந்து நீக்கி எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். ஐடி விங்கின் துணை செயலாளரான பிரசாத் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படுவதாகவும் அறிவித்துள்ளார்.



அரசு வேலை வாங்கித் தருவதாக கூறி பணம் பெற்று மோசடி செய்த வழக்கில் பிரசாத் சிக்கியுள்ள நிலையில், கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

சென்னை மயிலாப்பூர் ராதாகிருஷ்ணன் சாலையை சேர்ந்தவர் பிரசாத் (33), அதிமுக ஐடி விங் தென் சென்னை தெற்கு கிழக்கு மாவட்ட துணை செயலாளரான இவர் கடந்த 22 ஆம் தேதி தனது நண்பர்கள் சிலருடன் நுங்கம்பாக்கம் பகுதியில் உள்ள பிரபல தனியார் பாரில் மது அருந்திக் கொண்டிருந்தார். அப்போது ஒருவருடன் தகராறில் பார் அடித்து நொறுக்கப்பட்டது.

பார் மேலாளர் அளித்த புகாரின்படி அதிமுக ஐடி விங் நிர்வாகி பிரசாத், அதிமுக நிர்வாகி அஜய் வாண்டையார், அவரது நண்பரான முக்குலத்தோர் புலிப்படையை சேர்ந்த ரவுடி சுனாமி சேதுபதி, கணேஷ் குமார், தனசேகரன் மற்றும் தூண்டில் உணவக உரிமையாளர் ராஜா என மொத்தம் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதில் சிக்கிய அதிமுக ஐடி விங் நிர்வாகி பிரசாத் மீது அரசு வேலை வாங்கி தருவதாக பலரிடம் பணம் பெற்று மோசடி செய்ததாக புகார்கள் அளிக்கப்பட்டன. பிரசாத்திடம் நடத்திய விசாரணையில், அஜய் வாண்டையார், ரவுடி சுனாமி சேதுபதி, தூண்டில் உணவக உரிமையாளர் ராஜா ஆகியோர் பல சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வந்ததும் அம்பலமானது.

மேலும், தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறிக்கும் வேலையும் பிரசாத் உள்ளிட்டோர் அடங்கிய கும்பல் செய்து வந்துள்ளது. இவர்களிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில், மேலும் சிலரும் இந்த வழக்கில் சிக்கியுள்ளனர்.

இந்நிலையில், அதிமுக ஐடி விங் நிர்வாகி பிரசாத், அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அதிமுக தகவல் தொழில்நுட்ப அணியின் தென்சென்னை தெற்கு கிழக்கு மாவட்ட துணை செயலாளரான பிரசாத் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படுவதாகவும் அறிவித்துள்ளார் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி.

முன்னதாக திமுக ஐடி விங் வெளியிட்ட சமூக வலைதள பதிவில், "அஇஅதிமுகவின் தகவல் தொழில்நுட்ப அணியா இல்லை, தரகர் அணியா? சட்டத்திற்கு புறம்பாக ரவுடியிசம், கட்டப்பஞ்சாயத்து, பண மோசடி, பாலியல் சீண்டல் என அஇஅதிமுகவின் குற்றச் செயல்களின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை.

அஇஅதிமுகவின் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர் பிரசாத் என்பவர் நுங்கம்பாக்கத்தில் ஒரு மது கூடத்தில் மோதலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

அவர் மீது தொடர்ச்சியாக பலர் பணமோசடி, மற்றும் ஒன்றிய அரசில் வேலை வாங்கித் தருவதாக கூறி தரகர் வேலை செய்து ஏமாற்றியது தொடர்பாக புகார் அளித்து வருகின்றனர். அதிமுகவின் தகவல் தொழில்நுட்ப அணி, தரகர் அணியாக கேவலப்பட்டு நிற்கிறது.

ஆனாலும், இதுவரை இவர் மீது அதிமுக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன்? அவர் மீது பயமா? அல்லது அவரிடம் உள்ள மிதுன் சார்ந்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள்தான் பயத்திற்கு காரணமா?" எனக் காட்டமாக விமர்சித்திருந்தது.

# இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் முருகன் மாநாடு நடத்துவோம் தமிழிசை சவுந்தரராஜன்

மதுரை, ஜூன் 8

மதுரை மாவட்டத்தில் வரும் 22ந்தேதி இந்து முன்னணி சார்பில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த மாநாட்டில் உத்தர பிரதேச முதல்மந்திரி யோகி ஆதித்யநாத், ஆந்திர துணை முதல்மந்திரி பவன் கல்யாண், மத்திய மந்திரிகள், பா.ஜ.க. தேசிய தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த மாநாடு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என மத்திய மந்திரி எல்.முருகன் தெரிவித்துள்ளார். அதே சமயம், இது சங்கிகள் மாநாடு என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு விமர்சித்துள்ளார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை இது குறித்து பேசுகையில், "ஏற்கனவே நம்முடைய இந்து அறநிலையத்துறை சார்பாக முருகன் மாநாடு நடத்தப்பட்டது. இவர்கள் இப்போது நடத்த வேண்டிய தேவை என்ன இருக்கிறது? வேண்டுமென்றால் குஜராத், உத்தர பிரதேசம் போன்ற இடங்களில் முருகன் மாநாட்டை நடத்தலாமே?" என்று கேள்வி எழுப்பினார்.

இந்நிலையில், மதுரையில் பா.ஜ.க. மாநில முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;



"நாங்கள் பயபக்தியோடு முருகன் மாநாடு நடத்த இருக்கிறோம். ஆனால் அமைச்சர் சேகர் பாபு உள்ளிட்டோர் பயத்துடன் முருகன் மாநாட்டை பார்க்கிறார்கள். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும், ஆன்மிகம் தழைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்த மாநாட்டை நடத்துகிறோம்.

நாங்கள் எப்போதுமே முருகனை வணங்குபவர்கள்தான். ஆனால் கடவுள் நம்பிக்கை இல்லை என்று கூறுபவர்கள் முருகன் மாநாடு நடத்தியதுதான் மக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே திருமாவளவன் கவலைப்பட வேண்டாம். எங்களிடம் இருப்பது மதவாதம் கிடையாது, மனிதத்துவம்.


2026ல் எங்களுக்கு வெற்றி வரும், அதன்பிறகு அவர்கள் ஓய்வு எடுக்கலாம். முருகன் மாநாட்டை இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் நடத்தலாம். தமிழ்நாட்டில் முதலில் நடத்தி விட்டு பின்னர் மற்ற மாநிலங்களில் நடத்துவோம்."

இவ்வாறு தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

# சவால்களை தீர்க்கமுடன் எதிர்கொண்டு ஜனநாயகம் செழித்தோங்க உறுதியேற்போம்: நெல்லை முபாரக்

சென்னை ஜூன் 8

எஸ்டிபிஐ கட்சியின் மாநிலதலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள பக்ரீத் பண்டிகை வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:



தியாகத் திருநாளாம் ஈதுல் அழ்ஹா எனும் பக்ரீத் பெருநாளை மகிழ்ச்சியுடனும், உள்ளம் பூரித்தும் கொண்டாடும் அனைத்து முஸ்லிம் உறவுகளுக்கும் என் இதயம் கனிந்த வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் உன்னத தியாகத்தைப் போற்றி, இந்நன்னாள் நம்மை தியாக உணர்வுடன் வழிநடத்துகிறது. அவரது அறிவு, துணிவு, அர்ப்பணிப்பு மற்றும் தியாக மனோபாவம் நமக்கு என்றும் வழிகாட்டியாகத் திகழ்கின்றன. தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்விலும் எதிர்கொள்ளும் சவால்களை தீர்க்கமுடன் எதிர்கொண்டு, அநீதிக்கு எதிராகப் போராடி, அன்பு, அமைதி, சமூக நல்லிணக்கம், ஜனநாயகம் ஆகியவை செழித்தோங்கவும், ஒடுக்கப்பட்டோர் உயரவும், நீதி வெற்றி பெறவும் தியாக உறுதியேற்போம்.

இந்நன்னாளில், உலகெங்கும் அமைதி, மனிதநேயம், மத நல்லிணக்கம் தழைக்கவும், குறைகள் நீங்கி மக்கள் நிறைவான வாழ்வு பெறவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தங்கக் கடனுக்கான நிபந்தனைகளை ரிசர்வ் வங்கி தளர்த்தியது மகிழ்ச்சியளிக்கிறது சு. வெங்கடேசன்

சென்னை ஜூன் 8

தங்கக் கடன் பிரச்சினையில் நிபந்தனைகளை தளர்த்தி ரிசர்வ் வங்கி விதிமுறைகளை வெளியிட்டிருப்பது எங்கள் கோரிக்கைக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்று மதுரை எம்.பி. சு. வெங்கடேசன் கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தங்கக் கடன் பிரச்சினையில் நிபந்தனைகளை தளர்த்தி ரிசர்வ் வங்கி விதிமுறைகளை வெளியிட்டது மகிழ்ச்சியளிக்கிறது. இப்பிரச்சினை சம்பந்தமாக மத்திய நிதி மந்திரியிடம் நேரில் சந்தித்து தந்த கடிதத்தின் பல அம்சங்கள் ஈடேறி உள்ளன என்பது மகிழ்ச்சி. ரிசர்வ் வங்கி கவர்னருக்கு நான் எழுதிய கடிதத்திற்கும் எனது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருவதாக பதில் வந்தது. இப்பொழுது ரிசர்வ் வங்கி முழுமையான விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எமது கோரிக்கைகள்:



1. தங்க நகைக்கான உடைமைக்கு கடன்தாரரின் சுய அறிவிப்பு மட்டுமே போதும். நகைக்கான ரசீது தேவையில்லை.

2. ரூ.2.5 லட்சம் வரை கடன்களுக்கு கடன் பிணை மதிப்பு (Loan to Value) விகிதம் 85 சதவீதமாக உயர்த்தப்படும்.

3. ரூ.2.5 லட்சம் வரை கடன்களுக்கு கடன் தகுதி மதிப்பீடு தேவையில்லை.

4. முன்னுரிமைத்துறை கடன் நிபந்தனைகளின் நன்மையை பெறாதவர்களுக்கு தங்கக் கடனின் இறுதிப் பயன்பாட்டைப் பற்றி கடன் வழங்கும் நிறுவனங்கள் கண்காணிக்க தேவையில்லை.

இது எளிய மக்கள் நலனுக்கான குரலுக்கு கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகும். முழுமையான விதிமுறைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்ந்து கூடுதல் தகவல்கள் மற்றும் கோரிக்கைகளை பகிர்ந்து கொள்வேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சூலூர் அருகே வடமாநில நபர் கல்லால் அடித்து கொலை

கோயம்புத்தூர் ஜூன் 8

கோவை மாவட்டம் சூலூர் அருகே வடமாநில நபர் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசூர் பகுதியில் டாஸ்மாக் கடையின் பின்புறம் உள்ள காட்டில் வடமாநில நபர் கல்லால் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.




முகம் சிதைக்கப்பட்ட நிலையில் வடமாநில நபரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கொலைக்கான காரணம் என்ன? கொலையாளிகள் யார்? என்பது குறித்து சூலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பூந்தமல்லி போரூர் இடையே ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயில் 3-ம் கட்ட சோதனை ஓட்டம் வெற்றி

திருவள்ளூர், ஜூன் 8

பூந்தமல்லி போரூர் இடையே ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயில் 3ஆம் கட்ட சோதனை ஓட்டம் நேற்று முன்தினம் வெற்றி அடைந்துள்ளது. சென்னை மெட்ரோ ரயிலில் 2ஆம் கட்டத்திட்டத்தில் ரூ.63,246 கோடி மதிப்பீட்டில் 3 வழிதடங்களில், 118.90 கி.மீ தொலைவிற்க்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் ஒட்டுமொத்தமாக 128 ரயில் நிலையங்கள் அமையவுள்ளது.

மெட்ரோ ரயில் 2ஆம் கட்டத்திட்டத்தில் 4ஆம் வழித்தடமான பூந்தமல்லி முதல் கலங்கரை விளக்கம் வரையிலான 26.10 கி.மீ தொலைவின் ஒரு பகுதியான பூந்தமல்லி முதல் போரூர் வரையில் முதற்கட்டமாக இந்த ஆண்டு டிசம்பரில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. பூந்தமல்லி நெடுஞ்சாலை மெட்ரோ ரயில் நிலையம் முதல் போரூர் வரையில் மொத்தம் 10 ரயில் நிலையங்கள் அமைய உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், பூந்தமல்லி பணிமனையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயில் முதன் முறையாக கடந்த மார்ச் மாதம் பூந்தமல்லி பணிமனையில் இருந்து முல்லை தோட்டம் வரையில் 2.5 கி.மீ தூரத்திற்கு 25 கி.மீ. வேகத்தில் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

தொடர்ந்து இதே வழித்தடத்தில் 2ஆம் கட்ட சோதனை ஓட்டம் கடந்த ஏப்ரல் 28ஆம் தேதி நடைபெற்றது. இந்நிலையில், பூந்தமல்லி போரூர் வழித்தடத்தில் ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரெயில் 3ஆம் கட்ட சோதனை ஓட்டம் நேற்று முன்தினம் (ஜூன் 6) வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. கடந்த முறை அப்லைனில் சோதனை ஓட்டம் நடந்த நிலையில், இந்த முறை டவுன் லைனில் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குநர் சித்திக் கூறியது, தொடக்கத்தில் 20 முதல் 25 கி.மீ வேகத்தில் இயக்கப்பட்ட மெட்ரோ ரயில் பின்னர் 60 முதல் 70 கி.மீ வேகத்தில் இயக்கப்பட்டது. பூந்தமல்லியில் இருந்து போரூர் வரை மெட்ரோ ரயில் முழு வேகத்தில் செல்வதற்கான சோதனை ஓட்டம் நடைபெறவுள்ளது. வருகின்ற மாதங்களில் தண்டவாளங்களின் வழித்தடங்கள் மற்றும் சிக்னல் உள்ளிட்ட பல்வேறு சோதனை ஓட்டங்கள் நடைபெற உள்ளது.

9.5 கி.மீ வழித்தடத்தில் சாலையின் மேல் ரயில் செல்லும் டபுள் டக்கர் வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது. இது சவாலாக இருந்தது அந்த பணி கடந்த மாதம் முடிவடைந்தது. போரூரில் இருந்து வடபழனி வழியாக பவர் ஹவுஸ் வரையும், டபுள் டக்கர் பகுதியில் இருந்து கோயம்பேடு வரையிலுமான பணிகள் அடுத்த ஆண்டு ஜூலை மாதத்திற்குள் முடிவடையும்.

மேலும் இந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் பூந்தமல்லி இருந்து போரூர் வரையிலான ஓட்டுநர் இல்லா மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும் என்றார்.

# 750 பேருக்கு கிரிக்கெட் உபகரணங்களை வழங்கிய அமைச்சர்

சென்னை, ஜூன் 8

திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்களை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்.



விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் முன்னிலையில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. 750க்கும் மேற்பட்ட கிரிக்கெட் விளையாட்டு வீரர்களுக்கு, இலவச பேட், ஸ்டம்ப் மற்றும் பந்துகளை அமைச்சர் வழங்கினார். அமைச்சர் அலுவலகம் முன்பு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. முன்னதாக நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து கிரிக்கெட் அணியினருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.

# வில்லிவாக்கம் பகுதியில் வீட்டில் குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த நபர் கைது: 52.5 கிலோ குட்கா பறிமுதல்

சென்னை, ஜூன் 8

1 வில்லிவாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் வில்லிவாக்கம், சிட்கோ நகர் பகுதியில் உள்ள ஒரு வீட்டை சோதனை செய்தபோது, அங்கு விற்பனைக்காக தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், 1 வில்லிவாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சட்டவிரோதமாக குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக வீட்டில் பதுக்கி வைத்திருந்த இஸ்தகார் ஆலம், வ/28, , சிட்கோ நகர், வில்லிவாக்கம், சென்னை என்பவரை கைது செய்தனர். வீட்டில் பதுக்கி வைத்திருந்த ஹான்ஸ், கூலிப், விமல் உட்பட மொத்தம் 52.5 கிலோ கிராம் எடை கொண்ட குட்கா புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட தலைமறைவு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரி இஸ்தகார் ஆலம் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# நெல்லை மாநகரில் 15 நாட்களுக்கு போராட்டங்கள் நடத்த தடை: போலீஸ் கமிஷனர் உத்தரவு

திருநெல்வேலி ஜூன் 8

திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் சந்தோஷ் ஹாதிமணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி மாநகரப் பகுதிகளில் பொது அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணும் வகையில், அடுத்த 15 நாட்களுக்கு மக்கள் கூடுதல், கூட்டங்கள், பேரணிகள், போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவு சென்னை நகர காவல் சட்டம் 1997, பிரிவு 41(2)ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு இன்று (ஜூன் 7, 2025) நள்ளிரவு 00:00 மணி முதல் ஜூன் 21, 2025 அன்று இரவு 24:00 மணி வரை அமலில் இருக்கும்.



இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 'மதவாத அரசியலுக்கு தமிழக மக்களும், தமிழ் கடவுள் முருகனும் மயங்க மாட்டார்கள்' திருமாவளவன்

சென்னை, ஜூன் 8

மதுரை மாவட்டத்தில் வரும் 22ந்தேதி இந்து முன்னணி சார்பில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த மாநாட்டில் உத்தர பிரதேச முதல்மந்திரி யோகி ஆதித்யநாத், ஆந்திர துணை முதல்மந்திரி பவன் கல்யாண், மத்திய மந்திரிகள், பா.ஜ.க. தேசிய தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த மாநாடு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என மத்திய மந்திரி எல்.முருகன் தெரிவித்துள்ளார். அதே சமயம், இது சங்கிகள் மாநாடு என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு விமர்சித்துள்ளார். இந்நிலையில், சென்னை விமான நிலையத்தில் இது குறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களிடம் பேசியதாவது;


"மாநிலத்திற்கு மாநிலம் பா.ஜ.க. தனது மதவாத அரசியலை மாற்றிக்கொள்ளும். வட இந்தியாவில் ராமர், விநாயகர், மேற்கு வங்காளத்தில் துர்கா, காளியை வைத்து அரசியல் செய்வதற்கள் தமிழ்நாட்டில் முருகனை வைத்து அரசியல் செய்கிறார்கள். பிற மாநிலங்களில் மதவாத அரசியலுக்கு மக்கள் மயங்குவதைப் போல் தமிழக மக்களும், தமிழ் கடவுள் முருகனும் மயங்கிவிட மாட்டார்கள்.

மதவாதத்தை விரட்டியடிக்கக் கூடியவரான முருகன், சங்கிகளுக்கு தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை 2026 தேர்தலில் உறுதிப்படுத்துவார். அவர்கள் என்ன மாநாடு போட்டாலும், அது தமிழ்நாட்டில் எடுபடாது."

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

தின கனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
8.6.2025

# தர்மபுரி: அடுத்தடுத்து 4 வாகனங்கள் மோதல் போக்குவரத்து பாதிப்பு



தர்மபுரி, ஜூன் 8

தர்மபுரி மாவட்டம் தொப்பூர் கணவாய் வழியாக நேற்று ஒரு லாரி வந்தது. இந்த லாரி தொப்பூர் இரட்டை பாலம் அருகே வந்தது. அப்போது கட்டுப்பாட்டை இழந்த லாரி முன்னால் சென்ற சரக்கு வேன் மீது மோதியது. இதில் கட்டுப்பாட்டை இழந்த அந்த வேன் முன்னால் சென்ற 2 கார்கள் மீது அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் கார்கள் நொறுங்கின. அதில் வந்தவர்கள் லேசான காயம் அடைந்தனர். இந்த விபத்து காரணமாக தர்மபுரி சேலம் தேசிய நெடுஞ்சாலையில் 2 மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் வாகனங்கள் அணிவகுத்து நின்றதால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகினர்.

இந்த விபத்து குறித்து தகவல் அறிந்ததும் தொப்பூர் போலீசார் மற்றும் சுங்கச்சாவடி ரோந்து படையினர் விரைந்து சென்று விபத்துக்குள்ளான வாகனங்களை அப்புறப்படுத்தினர். தொடர்ந்து போலீசார் போக்குவரத்தை சீர்செய்தனர். இந்த விபத்து குறித்து தொப்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வடமதுரை: தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போலீசார்



திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் உத்தரவின் கீழ் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு, வடமதுரை எல்லைக்குட்பட்ட தங்கம்மாபட்டி சோதனை சாவடியில் வடமதுரை காவல் ஆய்வாளர் கண்ணன் தலைமையில் சிறப்பு காவல்சார்பு ஆய்வாளர்கள் முத்துச்சாமி, சந்திரசேகர் மற்றும் காவல்துறையினர் தீவிர வாகன சோதனையிலும், பாதுகாப்பு பணியிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

# இன்றைய ராசி பலன்கள் (8.6.2025)




பொதுப்பலன்: புதிய பொறுப்புகள் கிடைக்கும். எதிர்பாராத செய்திகள் வரலாம். வேலை: அதிகாரிகளிடமிருந்து ஆதரவு கிடைக்கும். நிதி: வருமானம் அதிகரிக்கும். குடும்பம்: மனைவியின் உடல்நிலையை கவனிக்கவும்.




பொதுப்பலன்: உடல்நலத்தில் கவனம் தேவை. உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளை தவிர்க்கவும். வேலை: முன்னேற்றத்திற்கான பாதை அமைக்கப்படும். நிதி: நண்பரிடமிருந்து நிதி ஆதாயம் கிடைக்கும். குடும்பம்: மனநிலை மகிழ்ச்சியாக இருக்கும்.




பொதுப்பலன்: புதிய பொறுப்புகள் கிடைக்கும். மனம் அமைதியின்றி இருக்கும். வேலை: பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் ஏற்படும். நிதி: ஆடம்பர பொருட்களை வாங்குவதைத் தவிர்க்கவும். குடும்பம்: கல்விப் பணிகள் மகிழ்ச்சியான பலன்களைத் தரும்.




பொதுப்பலன்: நண்பர்களிடமிருந்து ஆதரவு கிடைக்கும். வேலை: தொழிலில் லாபத்திற்கான வாய்ப்புகள் இருக்கும். நிதி: நண்பரிடமிருந்து நிதி ஆதாயம். குடும்பம்: குடும்பத்தின் ஆரோக்கியத்தை கவனிக்கவும்.




பொதுப்பலன்: உணர்ச்சித் தெளிவு கிடைக்கும். வேலை: மூத்த அதிகாரிகளிடமிருந்து ஆதரவு கிடைக்கும். நிதி: பண வரவு அதிகரிக்கும். குடும்பம்: குடும்பத்துடன் நல்ல நேரம் செலவிடுவீர்கள்.




பொதுப்பலன்: முக்கிய வேலைகளில் வெற்றி பெறலாம். வேலை: தொழில் முறை பணிகளில் அர்ப்பணிப்பு பலனைத் தரும். நிதி: நிதி ரீதியாக நாள் சாதாரணமாக இருக்கும். குடும்பம்: தொழில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.




பொதுப்பலன்: புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன. வேலை: குழு பணிகளில் முன்னேற்றம் காணலாம். நிதி: மிதமான செலவுகள் ஏற்படும். குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.




பொதுப்பலன்: தன்னம்பிக்கை அதிகரிக்கும். வேலை: புதிய திட்டங்களில் ஈடுபடுவீர்கள். நிதி: பண வரவு நிலையாக இருக்கும். குடும்பம்: உறவுகளில் ஒற்றுமை காணப்படும்.




பொதுப்பலன்: பயணங்கள் ஏற்படலாம். வேலை: புதிய பொறுப்புகள் கிடைக்கும். நிதி: மிதமான வருமானம் கிடைக்கும். குடும்பம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.




பொதுப்பலன்: மதிப்பும் மற்றும் மரியாதை அதிகரிக்கும். வேலை: தொழிலில் முன்னேற்றம் காணப்படும். நிதி: பண வரவு அதிகரிக்கும். குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.




பொதுப்பலன்: முதலீடுகள் நன்மை தரும். வேலை: புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன. நிதி: முதலீடுகள் மூலம் லாபம் கிடைக்கும். குடும்பம்: குடும்பத்தில் அமைதி நிலவும்.




பொதுப்பலன்: உணர்ச்சி நிலை மேம்படும். வேலை: புதிய பொறுப்புகள் கிடைக்கும். நிதி: வருமானம் அதிகரிக்கும். குடும்பம்: குடும்ப உறவுகள் மேம்படும்.

# நாமக்கல்: பழைய இரும்புக் கடையில் பயங்கர தீ விபத்து



நாமக்கல் ஜூன் 8

நாமக்கல் மாவட்டம் வள்ளிபுரத்தில் முத்துகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமாக பழைய இரும்பு கடை உள்ளது. இந்த கடையில் இன்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

கடையில் பழைய பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் தீ மளமளவென பரவியது. தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் பற்றி எரிந்த தீயை ஒருமணிநேரம் போராடி அணைத்தனர்

இந்த தீ விபத்தில் கடையில் இருந்த ரூ. 10 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் எரிந்து நாசமடைந்தன. இந்த தீ விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திண்டுக்கல் ரயில் நிலைய நடை மேடை சீரமைப்பு பணி



திண்டுக்கல்: ரயில் நிலையத்தில் பயணிகள் வழுக்கி விழுவதைத் தடுக்க நடைமேடைகளில் புதிய தரைத்தளம் அமைக்கும் பணி நடக்கிறது. அதன்படி 3 அடி அகலத்தில் பதிக்கப்பட்டுள்ள சிவப்பு நிற ஓடுகளை அகற்றிவிட்டு புதிய தரைத்தளம் அமைக்கப்படுகிறது.

இதற்காக 3 அடி அகலத்தில் கான்கிரீட் சிலாப்புகள் வைக்கப்பட்டுள்ளன. இதையடுத்து முதல்கட்டமாக முதலாவது நடைமேடையில் புதிய தரைத்தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

# தோவாளை மார்க்கெட்டில் பூக்கள் விலைகிடுகிடு உயர்வு



குமாரி, ஜூன் 8

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அருகே தோவாளையில் பிரசித்தி பெற்ற பூ மார்க்கெட் உள்ளது. இங்கு குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. மேலும் நெல்லை,மதுரைபோன்ற பிற மாவட்டங்களில் இருந்தும் லாரி, டெம்போக்கள் மூலம் பூக்கள் விற்பனைக்கு வருகின்றன. பூக்களின் விலை ஏறி இறங்கும் தன்மை கொண்டது. அதாவது பண்டிகை மற்றும் பூக்கள் வரத்து குறைவு காலங்களில் விலை உயர்ந்தும், வரத்து அதிகரிப்பு, சாதாரண நாட்களில் விலை குறைந்தும் காணப்படும்.

அந்தவகையில் இன்று (சனிக்கிழமை) பக்ரீத் பண்டிகை என்பதால் நேற்று தோவாளை மார்க்கெட்டில் பிச்சிப்பூ விலை உயர்ந்து காணப்பட்டது. அதன்படி மார்க்கெட்டில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.600க்கு விற்பனையான பிச்சி நேற்று ரூ.600 உயர்ந்து ரூ.1,200க்கும், ஒரு கிலோ முல்லை ரூ.550ல் இருந்து ரூ.550 உயர்ந்து ரூ.1100க்கும் விற்பனையானது.

## அதர்வா நடித்துள்ள "டி.என்.ஏ" படத்தின் "பீலிங் பாட்டு" பாடல் வெளியீடு




'பாணா காத்தாடி' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகனாக அறிமுகமானவர் அதர்வா முரளி. பரதேசி, இமைக்கா நொடிகள், சண்டி வீரன், ஈட்டி போன்ற படங்களில் தனது சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி தனக்கென தனி ரசிகர்களை கொண்டவர் நடிகர் அதர்வா.


இயக்குநர் நெல்சன் வெங்கடேசன் இயக்கத்தில் அதர்வா முரளி 'டி.என்.ஏ' திரைப்படத்தில் நடித்துள்ளார். கடந்த 2016ம் ஆண்டு தினேஷ், மியா ஜார்ஜ், நிவேதா பெத்துராஜ் நடிப்பில் வெளியான 'ஒரு நாள் கூத்து திரைப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் நெல்சன் வெங்கடேசன். அதன் பின்னர் 'மான்ஸ்டர்', 'பர்ஹானா' போன்ற திரைப்படங்களை இயக்கி வரவேற்பை பெற்றார்.

ஒலிம்பியா மூவிஸ் நிறுவனம் இப்படத்தை தயாரித்து வருகிறது. சித்தா படத்தின் மூலம் கவனத்தை ஈர்த்த நிமிஷா சஜயன் இப்படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். அதர்வா முரளியின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டது. 'டி.என்.ஏ' படம் ஆக்சன் திரில்லர் பாணியில் உருவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தில்முக்கியஅம்சம்என்னவெனில்இதில்இடம்பெற்றுள்ள5பாடல்களும்5வெவ்வேறுஇசையமைப்பாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 'டி.என்.ஏ' படம் வரும் 20ந் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்தது.

இந்நிலையில் அதர்வா, நிமிஷா சஜயன் நடித்துள்ள 'டி.என்.ஏ' படத்தின் 'பீலிங் பாட்டு' பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த இரண்டாவது பாடலை சகி சிவா எழுதி, இசையமைத்துள்ளார்.

குபேரா படமும் டி.என்.ஏ படமும் 20ந் தேதி தேதி திரைக்கு வர உள்ளதால், 2 படத்துக்கும் இடையே போட்டி அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## "தக் லைப்" படத்தில் குஷ்பு மகள்! திரையில் மகள் பெயரை பார்த்து குஷ்பு நெகிழ்ச்சி




36 வருடங்களுக்குப் பிறகு கமல்ஹாசன் மணிரத்னம் கூட்டணியில் உருவாகியுள்ள படம் 'தக் லைப்'. இப்படத்தில் நடிகர் சிம்பு, திரிஷா, ஜோஜுஜார்ஜ், ஐஸ்வர்யாலட்சுமி, கவுதம்கார்த்திக் மற்றும் பாலிவுட் நடிகர் அலி பசல் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருக்கும் இப்படத்தை ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல், மெட்ராஸ் டாக்கீஸ், ரெட்ஜெயன்ட்மூவிஸ்இணைந்துதயாரித்துள்ளது. இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் நடிகர்கள் கமல்ஹாசன், சிலம்பரசன் நடிப்பில் உருவான 'தக் லைப்' திரைப்படத்தின் மீது பெரிய அளவில் எதிர்பார்ப்பு இருந்தது. இப்படம் இரண்டு நாட்களில் உலகளவில் ரூ. 52 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

தமிழ் சினிமாவின் 80 மற்றும் 90 காலகட்டங்களில் முன்னணி நடிகையாக கொடிகட்டி பறந்தவர் குஷ்பு. இவர் பாலிவுட் திரையுலகில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானார். பின்னர் தமிழில் 'வருஷம் 16' திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகி முன்னனி நடிகையாக திகழ்ந்தார். அதனைதொடர்ந்து இயக்குனர் சுந்தர்.சியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவருக்கு, இரண்டு மகள்கள் உள்ளனர். இவர் தற்போது நடிப்பது மட்டுமின்றி அரசியலிலும் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த நிலையில் இந்த படத்தில் மணிரத்னத்திற்கு உதவி இயக்குநர்களாக பலர் பணியாற்றியிருக்கிறார்கள். அதில் குஷ்புவின் இளைய மகள் அனந்திதாவும் பணியாற்றியுள்ளாராம். இதுகுறித்து குஷ்பு தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் " மணிரத்னம் சார் படத்தில் என் மகளின் பெயரும் வந்ததை பார்த்து ஒரு பெற்றோராக நான் பெருமிதம் அடைகிறேன். மகளுக்கு முழங்காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக மணிரத்னம் படத்தில் கொஞ்ச காலம்தான் பணியாற்ற முடிந்தது. ஆனால் அந்த படத்தில் பணியாற்றியபோதுமணிரத்னத்திடம்இருந்துஎன்மகள்நிறையவிஷயங்களையும்தொழில்நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டார். இது எனது மகள் மனதில் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும். இந்த அனுபவம் உண்மையிலேயே அற்புதமானது. கொஞ்ச காலம் பணியாற்றியிருந்தாலும் என் மகளின் பெயரை மறக்காமல் இடம் பெறச் செய்தமைக்கு நன்றி மணி சார்" என கூறி, டைட்டிலில் மகளின் பெயர் இருக்கும் புகைப்படத்தை பதிவிட்டுள்ளார்.

இதையடுத்து குஷ்புவுக்கு ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். உங்கள் மகள் இயக்கத்தில் நீங்கள் நடிக்க வேண்டும் என குஷ்புவிடம் கோரிக்கை விடுத்தும் வருகிறார்கள்.

## டி.என்.பி.எல்.: சோனு யாதவ் ஹாட்ரிக்.. திருச்சி அணி 157 ரன்கள் சேர்ப்பு



9வது டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடரில் கோவையில் உள்ள எஸ்.என். ஆர்கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெற்று வரும் 3வது லீக் ஆட்டத்தில் நெல்லை ராயல் கிங்ஸ் திருச்சி கிராண்ட் சோழாஸ் அணிகள் விளையாடி வருகின்றன. இதில் டாஸ் வென்ற நெல்லை அணியின் கேப்டன் அருண் கார்த்திக் பந்துவீச்சை தேர்வு செய்தார் .

அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய திருச்சி அணிக்கு ஆரம்பம் சரியாக அமையவில்லை. தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன சுஜய் 12 ரன்களிலும், ஜெயராமன் 9 ரன்களிலும் விரைவில் ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து கைகோர்த்த வாசீம் அகமது ஜாபர் ஜமால் அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர். இவர்களில் வாசீம் அகமது 41 ரன்களிலும், ஜாபர் ஜமால் 39 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதி கட்டத்தில் ராஜ்குமார் அதிரடியாக விளையாடி (30 ரன்கள்) அணி வலுவான நிலையை எட்ட உதவினார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் திருச்சி அணி 8 விக்கெட்டுகளை இழந்து 157 ரன்கள் அடித்துள்ளது. நெல்லை தரப்பில் கடைசி ஓவரை வீசிய சோனு யாதவ் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

இதனையடுத்து 158 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி நெல்லை களமிறங்க உள்ளது.

## அப்படி நடந்தால் பும்ரா 5 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடலாம் இந்திய முன்னாள் பயிற்சியாளர்

இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. 4வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் சுழற்சிக்கு உட்பட்ட தொடர் இது என்பதால் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அத்துடன் ரோகித், விராட் கோலி டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று விட்டதால் அவர்கள் இல்லாமல் இந்திய அணி எப்படி விளையாட போகிறது? என்ற கேள்வி பலரது மத்தியில் எழுந்துள்ளது. மேலும் அவர்களின் இடத்தை நிரப்பப்போவது யார்? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்த தொடரில் இந்திய அணியின் பந்துவீச்சு கூட்டணியை ஜஸ்பிரித் பும்ரா முன்னின்று வழிநடத்த உள்ளார். இருப்பினும் அவரால் 5 போட்டிகளிலும் விளையாட முடியாது 3 போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் என்று தலைமை பயிற்சியாளரான கவுதம் கம்பீர் கூறினார். இது இந்திய அணிக்கு பின்னடைவாக கருதப்படுகிறது.

இந்நிலையில் இந்த தொடரில் மற்ற பந்துவீச்சாளர்களும் நன்றாக செயல்பட்டால் பும்ரா 5 போட்டிகளிலும் விளையாட முடியும் என்று இந்திய முன்னாள் பயிற்சியாளர் பரத் அருண் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "பாருங்கள், அதிகமாக பந்துவீசுவதும் குறைவாக பந்துவீசுவதும் காயங்களை ஏற்படுத்தும். சில பந்து வீச்சாளர்கள் காயம் அடைவதற்கு இவை சரியான வழியாகும். ஒரு போட்டியில் பும்ரா எத்தனை ஓவர்கள் பந்து வீசுவார் என்பதை நம்மால் கூற முடியாது. ஆனால் போட்டியில் அவர் வீசும் ஓவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அவருக்கான பயிற்சி அமர்வுகளை மாற்றி அமைக்க வேண்டும். அவர் ஜிம்மில் வேலை செய்வது, அல்லது பிசியோக்களுடன் ஏதாவது வேலை செய்வது என நேரத்தை பிரித்துக் கொள்ள வேண்டும். அவருடைய பணிச்சுமையை நிர்வகிப்பது என்பது மிகவும் முக்கியமான ஒரு விஷயமாக அமைகிறது.

பும்ரா அணியில் இருப்பது மிகப்பெரிய மதிப்பைச் சேர்க்கிறது. அவர் சிறப்பாக செயல்படுவது மட்டுமல்லாமல், மற்ற பந்து வீச்சாளர்களையும் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கிறார். எனவே அவர் 5 போட்டிகளிலும் விளையாட வேண்டும். அதற்கு மற்ற பந்துவீச்சாளர்களிடமிருந்து சரியான ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும். அவ்வாறு நடக்கும் பட்சத்தில் பும்ராவை 5 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட வைக்க முடியும்" என்று கூறினார்.

## இனி இதுபோன்ற நிகழ்வு நடக்காமல் இருப்பதை பி.சி.சி.ஐ. உறுதி செய்யும் தேவஜித் சைகியா



குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் இறுதிப்போட்டி கடந்த 3ந்தேதி நடந்தது. இதில் பஞ்சாப் கிங்சை தோற்கடித்து ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்.சி.பி.) அணி முதல் முறையாக கோப்பை வென்று மகுடம் சூடியது. அதற்கு மறுநாள் (4ந்தேதி) பெங்களூரு விதானசவுதாவில் விராட் கோலி உள்ளிட்ட வீரர்களுக்கு கர்நாடக அரசு சார்பில் பாராட்டு விழாவும், சின்னசாமி ஸ்டேடியத்தில் வெற்றிக் கொண்டாட்டமும் நடைபெற்றது. இதில், லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர்.

அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியானார்கள். இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இதற்கு பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து பி.சி.சி.ஐ. செயலாளர் தேவஜித் சைகியா கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "ஒரு கட்டத்தில் பி.சி.சி.ஐ. ஏதாவது செய்ய வேண்டியிருக்கும். நாங்கள் அமைதியாக இருக்க முடியாது. இது ஆர்சிபியின் தனிப்பட்ட நிகழ்வு. இருந்தாலும், இந்திய கிரிக்கெட்டுக்கு பொறுப்பு வகிக்கும் அமைப்பாக இதுபோன்ற நிகழ்வு இனி நடக்காமல் இருப்பதை பி.சி.சி.ஐ. உறுதி செய்யும்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.